**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – எட்டு சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் அமைத்தல் – முதல் கட்டமாக "திருச்சிராப்பள்ளியில் கணிதம், அறிவியல் சார்ந்த சிறப்பு நூலகம்" அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை**

**அரசாணை (நிலை) எண்.24** **நாள் 16.02.2018**

**திருவள்ளுவராண்டு, 2049**
**ஹேவிளம்பி வருடம், மாசி–04**

**படிக்கப்பட்டவை:–**

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5894/உ1/2017, நாள் 13.10.2017 மற்றும் 17.01.2018.

~*~~*~

**ஆணை:–**

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:–

> "தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்".

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளி மாணவ, மாணவர்களிடையே அறிவியல் உணர்வை ஊட்டவும், கணிதம் தொடர்பான சிந்தனைகளை வளர்க்கவும், கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆய்வு செய்பவர்களுக்கு புதுமைகளையும், நவீன கண்டுப்பிடிப்புகளையும் அறியச் செய்யும் வகையிலும், மேலும், குழந்தைகளுக்கு அறிவியல் மற்றும் கணிதம் பற்றிய நோக்கங்களை எளிய வகையில் புரிய வைக்கும் முறையிலும் அறிவியல் மற்றும் கணிதம் தொடர்பான நூல்கள், மாதிரிகள் டிஜிட்டல் வடிவில் நூல்கள் மற்றும் பிற ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு பொருள் சார்ந்த சிறப்பு நூலகத்தை திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் இரண்டாம் தளத்தில் அமைக்க தேவையான உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதரசெலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத் தொகை

ரூ.64,57,535/–ஐ (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து ஐநூற்று முப்பத்தைந்து மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்:–

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தின் இரண்டாவது தளத்தில் பொருள் சார்ந்த நூலகம் கட்டுவதற்கு உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கான செலவினம் | ரூ.43,00,000/– |
| 2. | அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் சார்ந்த அச்சுநூல்கள் வாங்குவதற்கான செலவினம் | ரூ.1,99,155/– |
| 3. | கணினிகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் வாங்க எல்காட் மதிப்பீட்டின்படியான செலவினம்<br>i) intel i5 Desktop Computer – 5<br>ii) Multimedia projector – 1<br>iii) intel i5 Laptop – 2<br>iv) Digital copier & printer – 1<br>v) Printer with scanner – 1<br>vi) 55" LED TV – 1 | ரூ.6,59,910/– |
| 4. | இரும்பு நூலடுக்குகள், நாற்காலிகள் மற்றும் மேஜைகள் ஆகிய உபகரணங்கள் வாங்க டான்சி நிறுவனம் மதிப்பீட்டின்படியான செலவினம்<br>Library Rack – 15<br>Round table – 10<br>Wooden Chair – 1<br>Big Teapoy – 1<br>VIP Chair – 10 | ரூ.9,69,529/– |
| 5. | கணிதம், அறிவியல் சார்ந்த Posters, 3D Structures மற்றும் கணித அறிவியல் சார்ந்த மாடல்களுக்கான செலவினம் | ரூ.2,93,311/– |
| 6. | மைக்செட் மற்றும் மேடை அமைப்பதற்கான செலவினம்<br>i) 150 watts speaker - 1<br>ii) Wireless hand and table mike - 1<br>iii) Wire Mike - 1<br>iv) Speaker box Floor stand – 1<br>v) Podium Fibre stand – 1 | ரூ.35,630/– |
| | மொத்த தொகை | ரூ.64,57,535/– |
| (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து ஐநூற்று முப்பத்தைந்து மட்டும்) | | |

3. பொது நூலக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை ஏற்று, "திருச்சிராப்பள்ளியில் கணிதம், அறிவியல் சார்ந்த சிறப்பு நூலகம்" அமைப்பதற்கு அனுமதியும் மற்றும் அதற்கான செலவினத் தொகையான ரூ.64,57,535/–ஐ (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து ஐநூற்று முப்பத்தைந்து மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ள பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.7141/கல்வி–II/2018, நாள் 13.02.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ),
சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை,
சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்